DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No.244 / 2018

Deposition of PW2/ LW4

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பெருமாள் |
| Father's / Husband Name | : | சக்கனதேவர் |
| Village | : | தங்கம்மாள்புரம் |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23.10.2025.

எதிரி ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அசா.1 என் உறவினர் . வழக்கு தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுத் தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து நீதிமன்ற அனுமதிக் கோரப்பட்டு**

**நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 21.01.2018 ம் தேதி 21.00 மணியளவில் அ.சா.1 ன் வீட்டு வாசலில் அசா.1 ன் மனைவி நின்றிருந்த போது ஆஜர் எதிரி அங்கு வந்து அசா.1 ன் மனைவியை பார்த்து அசிங்கமாக பேசி, அசா.1 ன் மனைவியின் நைட்டியை பிடித்து இழுத்து கீழே தள்ளி இரும்பு கம்பி கொண்டு அவரது பிடரியில் அடித்து ( பின்கழுத்து) காயத்தை ஏற்படுத்தி அசா.1 ன் மனைவியை பார்த்து கொலைமிரட்டல் விடுத்தார் என்றும் , சம்பவத்தை பார்த்த நான் சத்தம்போட்டு விலக்கிவிட்டேன் என்றும், அசா.1 ன் மனைவி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசாரிடம் அசா.1 புகார் வாக்குமூலம் அளித்தார் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி என் ஊர்காரர் என்பதால் மாற்றி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.10.23 15:58:20 +0530

Judicial Magistrate, Andipatti.

DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No.244 / 2018
Deposition of PW1/ LW1

| | | |
|---|---|---|
| Name | : | திரு.கிருஷ்ணகுமார் |
| Father's / Husband Name | : | கிருஷ்ணசாமி |
| Village | : | தங்கம்மாள்புரம் |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23.10.2025.
எதிரி ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என் உறவினர் . வழக்கு தொடர்பாக தற்போது சமாதானமாக சென்றுவிட்டோம். வழக்கினை மேற்கொண்டு நடத்த விருப்பம் இல்லை. என் மனைவி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது , என் மனைவி பேசமுடியாத நிலையில் இருந்ததால் , அவருக்கு உதவியாக இருந்த என்னிடம் போலீசார் புகார்வாக்குமூலத்தில் கையொப்பம் மட்டும் பெற்றுக் கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அசா.ஆ.1.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

***அரசுத் தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து நீதிமன்ற அனுமதிக் கோரப்பட்டு***

**நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 21.01.2018 ம் தேதி 21.00 மணியளவில் எனது வீட்டு வாசலில் என் மனைவி நின்றிருந்த போது ஆஜர் எதிரி அங்கு வந்து என் மனைவியை பார்த்து அசிங்கமாக பேசி, என் மனைவியின் நைட்டியை பிடித்து இழுத்து கீழே தள்ளி இரும்பு கம்பி கொண்டு அவரது பிடரியில் அடித்து ( பின்கழுத்து) காயத்தை ஏற்படுத்தி என் மனைவியை பார்த்து

கொலைமிரட்டல் விடுத்தார் என்றும் , என் மனைவி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசாரிடம் நான் புகார் வாக்குமூலம் அளித்தேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி என் ஊர்காரர் என்பதால் எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டு உண்மையை மாற்றி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சமாதான மனுவில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். **சமாதான மனு அசா.ஆ.2.**

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.10.23 15:58:27 +0530

Judicial Magistrate,
Andipatti.